2005 ஏப்ரல் 1]

திருப்பத்தூர் வட்டம், நத்தம் கிராமம், அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயிலில் 5 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக 5.64 ஏக்கர் நஞ்சை நிலமும், 34.33 ஏக்கர் புஞ்சை நிலமும் உள்ளன. நிலக் குத்தகையாக 16,550 ரூபாய் ஆலயத்திற்குப் பெறப்படுகிறது. மேலும் மர மகசூல் குத்தகையாக 2,375 ரூபாய் கிடைக்கப்பெறுகிறது. எனவே, இந்த ஆலயத்திற்கு ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் அரசு நிதியுதவி வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 267, திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

267—

குடமுழுக்கு

***53431—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதி, காமக்கூர் கிராமத்தில், அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயிலின் முகப்புக் கோபுரம் பழுதடைந்துள்ளதைச் சீர்செய்து, குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், காமக்கூர் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயிலில் இராஜகோபுரம் உட்பட அனைத்துப் பகுதிகளையும் பழுதுபார்க்கும் பணிக்கென, ரூ. 12,85,000/– மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. விரைவில், பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காமக்கூர் கிராமத்திலுள்ள அக்கோயிலுக்கு 30 ஆண்டுகளாக கும்பாபிஷேகம் செய்யப்படாமல் உள்ளதால் பொது

மக்கள், அமைச்சரிடத்திலே மனு கொடுத்தார்கள். இப்போது, அந்த அனுமதி வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் சொன்னதற்காக, எனது ஆரணி தொகுதி மக்கள் சார்பாகவும், காமக்கூர் கிராமத்து மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், பையூர் கிராமத்திலுள்ள கோயிலுக்கும் குடமுழுக்கு செய்யப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. பையூர் ஈஸ்வரன் கோயில், புகழ்பெற்ற ஆலயமாகும். அதற்கும் நிதி ஒதுக்கீடு செய்துதர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், காமக்கூர் கிராமத்திலுள்ள அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயில் — சந்திரசேகரசுவாமி திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்வதற்காக, 18 நபர்கள் அடங்கிய திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு, அதன்மூலமாக இன்றைக்கு அரசு மானியமாக, மூன்றில் ஒரு சதவிகிதம் கொடுக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்படுவதைப்போல, பையூர் கோயிலுக்கும், உறுப்பினர் முன்வந்து, அறங்காவலர் திருப்பணி Committee நியமித்து, அங்கே அந்தப் பொதுமக்களுடைய நிதியைப் பெறுவாரேயானால், அதற்குரிய estimate தொகையில், மூன்றில் ஒரு பங்கை அரசினுடைய மானியமாகக் கொடுத்து, பணிகள் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பணி Committee அமைத்து, மனு கொடுத்தால், திருப்பணிகள் செய்ய ஆவன செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆரணியில், புகழ்பெற்ற கயிலாயநாதர் திருக்கோயில்—கயிலாயநாதர் ஈஸ்வரன் கோயில் கும்பாபிஷேகம் செய்வதற்குண்டான பணிகள் எல்லாம் நடந்து, தயார் நிலையில் இருக்கிறது. மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர், மாண்புமிகு அம்மாவின் ஆணை பெற்று, விரைவில் அந்தக் கோயில் கும்பாபிஷேகம் நடப்பதற்கு ஆவன செய்ய முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பணிகள் செய்ய வேண்டுமென்று சொன்னால், 8–6–2005 — காலை 5–40 மணி முதல் 6–10 மணி வரை, 10–6–2005 — காலை 6–20 முதல் 7–00 மணி வரை, 17–6–2005 — காலை 10–00 முதல் 10–30 மணி வரை, 20–6–2005 — காலை 10–00

முதல் 11–00 மணி வரை, 24–6–2005, 13–7–2005, 5–9–2005, 8–9–2005, 14–9–2005 மற்றும் 15–9–2005 ஆகிய இந்தக் காலங்களில், அறநிலையத் துறை சம்பந்தப்பட்ட அனைத்து ஆலயங்களிலும் திருப்பணிகள் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 268, திரு. மா. சின்னசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

268—

ஆரம்ப சுகாதார நிலையம்

***33399—திரு. மா. சின்னசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம், பாப்பம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தினை கூடுதல் படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், பழனி ஊராட்சி ஒன்றியம், பாப்பம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம், பிரதான அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. இந்த ஒன்றியத்திலே, பழனி வட்ட மருத்துவமனை செயல்படுவதால், இந்த ஒன்றியத்தைச் சார்ந்த பாப்பம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் எவையும் இல்லை.*

திரு. மா. சின்னசாமி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைப் பாதம் பணிந்து தெரிவித்துக்கொண்டு, எனது பழனி தொகுதிக்குட்பட்ட பாப்பம்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள சுமார் 30 கிராமங்களின் மருத்துவத் தேவைக்காக, பாப்பம்பட்டியில்,* upgraded P.H.C. *என்னும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தி, அதில் 30 படுக்கை வசதிகளுடன், நவீன மருத்துவக் கருவிகள்*